டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.05.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 279 - Madurai | Online Edition

# நிதி ஆயோக்கின் 'கல்வி முதல் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வரை' உயர்நிலைக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது

புது தில்லி, மே 25

மத்திய நிதி அமைச்சர் 2026-27 பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருந்தபடி, நாட்டின் இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்றவும், சேவைத் துறையின் திறனை அதிகரிக்கவும் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 2026-27 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 'கல்வி முதல் வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வரை' உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் நிதி ஆயோக் முதன்மைச் செயல் அதிகாரியின் தலைமையில் இன்று நடைபெற்றது. வரும் 2047-ம் ஆண்டிற்குள் உலகளாவிய சேவைச் சந்தையில் இந்தியாவின் பங்கைக் குறைந்தபட்சம் 10 சதவீதமாக உயர்த்துவதற்குத் தேவையான உத்திகளை வகுக்க இக்குழு திட்டமிட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், வர்த்தகத் துறை, பொருளாதார விவகாரங்கள் துறை, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், உயர்கல்வித் துறை, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம், பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், பல்வேறு மாநில அரசுகள், தொழில் கூட்டமைப்புகள், கல்வித் துறை நிபுணர்கள் கலந்து கொண்டனர். இக்குழுவினர், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியை அதிகரித்தல், வேலைவாய்ப்புகளில் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களின் தாக்கங்கள், புதிய திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்தனர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும் உலகளாவிய மதிப்புச் சங்கிலியிலும் சேவைத்துறை முக்கியப் பங்காற்றி வருவதை நிலைக்குழு சுட்டிக்காட்டியது. நாட்டின் மக்கள் தொகையை ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான ஆற்றலாக மாற்றுவதற்கும், கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முனைவு ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் மத்திய-மாநில அரசுகள், தொழில்துறை, கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

# விவசாயிகள் வேளாண் திட்டங்களில் பயன் பெற விவசாய அடையாள அட்டை மிக அவசியம்



புதுக்கோட்டை, மே 25

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார விவசாயிகள் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கவுரவ நிதி உதவி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற தனித்துவ அடையாள எண் கட்டாயம் பெறவேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிஷா பேகம் தெரிவித்துள்ளார்.

அனைத்து விவசாயிகளும் அரசின் பல்வேறு திட்டப்பலன்களை பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமத்தினை தவிர்க்கும் வகையில் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாக அனைத்து விவரங்களையும் மின்னனு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது விவசாயிகளின் பதிவு விவரங்களுடன் ஆதார் எண், கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களையும் விடுப்பாடின்றி இணைக்கும் பணி சம்மந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் சிறப்பு முகாம் மூலம் நடைபெற்று வருகிறது.

எனவே பொன்னமராவதி வட்டார விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்களது ஆதார் எண், கைபேசி எண் மற்றும் நில உடைமை விவரங்களை அளித்து இத்திட்டத்தில் பதிவு செய்து பயன் பெறலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், மே 25

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி ஜூன் மாதத்திற்கான பயிற்சி 05.06.2026 வெள்ளிக்கிழமை அன்று அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழை வோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி எண் : 0422 - 6611336, 6611226, 96294 96555, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

**அடுப்பில்லா பழ உணவுகளின் பட்டியல் மற்றும் செய்முறை விளக்கங்கள்**

அடுப்பில்லா சமையலில் பழங்களைப் பயன்படுத்தி பலவிதமான சுவையான மற்றும் ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கலாம்.

சில பிரபலமான உணவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**4. பழ ஸ்மூத்தி (Fruit Smoothie)**

**தேவையான பொருட்கள்**

- வாழைப்பழம் – 1
- மாம்பழம் – 1/2 கப் (நறுக்கியது)
- பால் அல்லது பாதாம் பால் – 1 கப்
- தேன் – 1 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)
- ஐஸ் கட்டிகள் – சில (விருப்பத்திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. அனைத்து பொருட்களையும் மிக்ஸி ஜாரில் சேர்க்கவும்.
2. மென்மையாகும் வரை நன்கு அரைக்கவும்.
3. உடனடியாகப் பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# ஒருங்கிணைந்த உர மேலாண்மை கடைப்பிடிக்க வேண்டும் : வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு தகவல்




அரியலூர், மே 25 விவசாயிகள் எப்போதும் அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையில் கடைபிடிக்க வேண்டும். சாகுபடி செய்வதற்கு முன் மண் மாதிரி எடுத்து அதன் ஆய்வு அறிக்கை படி கிடைக்கக்கூடிய அனைத்து வகையான தொழு உரங்கள், பசுந்தால் பயிர், பசுந்தலைப்பயிர், பயிர் வகை பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்தல், அசோலா மற்றும் நீல பச்சை பாசியை பயன்படுத்துதல். அனைத்து வகையான உயிர் உரங்கள் மற்றும் அனைத்து வகையான நுண்ணூட்ட உரங்களுடன், பரிந்துரைக்கப்பட்ட உரங்களை எப்போதும் பயிர்களுக்கு அதன் வளர்ச்சி பருவங்களுக்கு ஏற்ப, சமச்சீர் வகையில் பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் தரட்டுப்பாடு அருண்மாறன், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரத்தில் தனியார் உரம் விற்பனை நிலையங் களை திடீர் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது உரங்களை விற்பனை நிலையத்தில் பெற்ற பிறகு வேறு ஒரு மாவட்டத் திற்கோ மாற்றப்பட்டு இருப்பதை அறிந்தால் உடனடியாக உரிமைத்த ரத்து செய்வதலுடன் அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 இன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்,


விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால்,புதிதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும்.

பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும் உரம் முட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்க வேண்டாம் பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன்படுத்தலாம் யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி பயன்படுத்த விவசாயிகளுக்கு எடுத்து கூற வேண்டும்.

வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அன்னவாசல் வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் விவசாயிகள் அடையாள எண் பெற சிறப்பு முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

புதுக்கோட்டை, மே 25

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகள் அடையாள எண் பெறுவது தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.




இந்நிலையில் அன்னவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் மதியழகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, இந்த சிறப்பு முகாமில் விவசாயிகள் தங்களுடைய நில உடைமைக்குரிய ஆவணங்களான கம்ப்யூட்டர் சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண் மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களை கொண்டு வந்து வேளாண்மை துறை தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு விவசாய அடையாள எண் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் இனிவரும் காலங்களில் விவசாய அடையாள எண் பதிவு செய்த விவசாயிகளுக்கு மட்டுமே உரங்கள் விதைகள் மற்றும் மானிய திட்டங்கள், பிஎம் கிசான் திட்டம் தொடர்பான நிதி மற்றும் பயிர் காப்பீடு பதிவு செய்வதற்கும் விவசாய அடையாள எண் பெற்றிருக்க வேண்டும்.எனவே விவசாயிகள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி 31.5.2026 தேதிக்குள் இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், வேளாண்மை இணை இயக்குனர், விதைச்சான்றளிப்புத் துறை, சென்னை, சாந்தி அன்னவாசல் வட்டாரத்தில் விளத்துப்பட்டி மற்றும் கீழக்குறிச்சி ஆகிய கிராமங்களுக்கு சென்று விவசாய அடையாள எண் பதிவு செய்வது குறித்து ஆய்வு பணி மேற் கொண்டு விவசாயிகளை நேரடியாக சந்தித்து விவசாய அடையாள எண்ணின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்து சிறப்பித்தார்கள். இவ்வாய்வு பணியில் அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண்மை அலுவலர்கள், புதுக்கோட்டை வேளாண்மை அலுவலர் தரக்கட்டுப்பாடு முகமது ரஃபி ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# மாநில விதைச்சான்று இணை இயக்குநர் விதைப்பண்ணைகள் ஆய்வு

புதுக்கோட்டை, மே 25

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விதைப் பண்ணை மற்றும் உயிர்மப்பண்ணைகளை சென்னை விதைச் சான்று இணை இயக்குநர் சாந்தி திங்கள்கிழமை (25.05.2026) அன்று ஆய்வு மேற்கொண்டார்.



புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டாரம், வானதிராயன்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள VRI 4 எள் இரகம் (2.5-ஏக்கர்) விதைப் பண்ணையை விதைச்சான்று இணை இயக்குநர் சாந்தி ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது பயிரிடப்பட்டுள்ள பயிர்களைப் பார்வையிட்டு தரத்தினை உறுதிப் படுத்துவதற்கான ஆலோசனை வழங்கியதுடன், தரமான விதைகள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைத்திட சன்றுப் பணிகளை விரைந்து முடித்திட விதைச்சான்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இவ்வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை இயற்கை வேளாண்மை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான ஊக்கத்தொகை மானியம் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களையும் எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் ரெ.பிரகாஷ், விராலிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மணிகண்டன், விதைச்சான்று அலுவலர் நடராஜன் மற்றும் உதவி விதை அலுவலர் உடன் இருந்தனர்.

# கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் மையத்தில் ஜுன் மாதம் நடைபெறும் பயிற்சி விபரம்

| வரிசை எண் | நாள் | பயிற்சியின் பெயர் மற்றும் நடைபெறுமிடம் |
|---|---|---|
| 1. | 02.06.26 | உயிர் உரங்களை பயன்படுத்தி சமச்சீர் உர மேலாண்மை **இடம் : மேல்புவனகிரி** |
| 2. | 02.06.26 | கடலூர் மாவட்டத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் நெல் இரகங்கள் **இடம் : கீரப்பாளையம்** |
| 3. | 04.06.26 | தளிர் கீரைகள் இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம். |
| 4. | 05.06.26 | உரங்களின் சமச்சீர் பயன்பாடு **இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம்.** |
| 5. | 06.06.26 | பயறு வகைகளில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் **இடம் : பட்டாம்பாக்கம்** |
| 6. | 08.06.26 | சிப்பிகாளான் வளர்ப்பு மற்றும் தாய் வித்து தயாரித்தல் பயிற்சி **இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம்.** |
| 7. | 09.06.26 | முந்திரி பழத்தில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் **இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம்.** |
| 8. | 11.06.26 | உயிர் உரங்களை பயன்படுத்தி சமச்சீர் உர மேலாண்மை **இடம் : கீழசதிசாவடி** |
| 9. | 16.06.26 | தானியங்களில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுதல் **இடம் : ஆதிவராகநல்லூர்** |
| 10. | 17.06.26 | முந்திரியில் கவாத்து மற்றும் வேர், தண்டு துளைப்பான் மேலாண்மை **இடம் : பிளாந்துறை** |
| 11. | 18.06.26 | உழவன் செயலி மூலம் விவசாயிகளுக்கு பரப்புரை செய்தல் **இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம்.** |
| 12. | 19.06.26 | காலநிலைக்கேற்ற அறிவுசார் வேளாண்மை **இடம் : கீழ்அனுவம்பட்டு** |

| | | |
|---|---|---|
| 13. | 22.06.26 | கம்பில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்கள் **இடம் : கோமாவிடந்தல்** |
| 14. | 23.06.26 | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் : சிறுகாலூர்** |
| 15. | 25.06.26 | நெல்லில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் **இடம் : முருகன்குடி** |
| 16. | 30.06.26 | இயற்கை விவசாயம் **இடம் : வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம்.** |

மேலும் விபரங்களுக்கு மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், கைபேசி எண் : 99943 15004 தொடர்பு கொள்ளலாம்.



# மழை, வெயில் வைத்து இனி வர்த்தகம் பண்ணலாம்? எப்படி?



நாட்டிலே அதிக மழை பொழிவை கொண்ட மும்பை நகரத்தை அடிப் படையாக கொண்டு நாட்டின் முதல் 'வானிலை டெரிவேட்டிவ்' வர்த்த கத்தை (TRADE) வெற்றிகரமாக என்.சி.டி.இ.எக்ஸ் என்ற அமைப்பு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. இதனுடைய செயல்பாடு வரும் ஜுன் 1 முதல் ஆரம்பமாகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

**எப்படி இந்த வர்த்தகம் உருவானது?**

பொதுவாக இந்தியாவின் கிழக்கு பகுதிகளில் அதிக அளவாக மழை பொழிவையும் தட்ப வெப்பநிலையும் உள்ளது. இதை அடிப்படையாக இந்த புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் (TRADE CONTRACT)அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**என்ன காரணம்**

புவி வெப்ப மாயமாதல் மற்றும் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பருவ நிலை (மழை, வெயில்) இடர்பாடுகளை எளிதாக கையாளுவதற்காக வெப்ப நிலை சார்ந்த டெரிடேடிவ்'கள் விவசாயத்துறைக்கு பெரிதும் உதவும் வகையில் இந்த வர்த்தம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

1) இந்த வானிலை டெரிடேடிவ்ற்கு RAIN MUMBAI (ரெயின் மும்பை) என்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

2) பருவமழை மற்றும் பற்றாக்குறையாக உள்ள காலங் களில் விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தை சரிகட்ட உதவுதல்.

3) இந்தியாவின் வானிலை மையம் தந்த 30 ஆண்டுகளின் சாரசரியை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

4) வருகிற ஜுன் 1 முதல் நடைமுறைப்படுத்தபட உள்ளது.

**யாருக்குகெல்லாம் பயன்?**

மழை மற்றும் வெயில் தாக்கத்தால் பாதிக்கப்படும் விவசாயத் துறை மட்டுமல்லாது வங்கிகள், நீர்மின் நிலையங்கள், போக்கு வரத்து துறை எப்.எம்.சி.ஜி நிர்வாகங்கள்.

இந்த வர்த்தகத்தை பயன்படுத்தி எளிதாக தங்களுடைய ரிஸ்க்–லிருந்து தப்பிக்க முடியும், குறிப்பாக பருவ மழை பெய்யாத காரணங்களால் வங்கிகளின் வாராகடன் அதிகரிக்கும் என்பதால் வங்கிகளுக்கு சிறந்த பாதுகாப்பாக இருக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விவசாயிகள் அடையாள எண் பதிவை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு

புதுக்கோட்டை, மே 25

புதுக்கோட்டைவட்டாரத்தில் விவசாயிகள் நில உடமைகள் பதிவு செய்யம் முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் வேளாண்மை இணை இயக்குநர் (விதைசான்றளிப்பு துறை) சாந்தி ஆய்வு செய்தார்.

இது குறித்து புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், புதுக்கோட்டை வட்டாரத்தில் விவசாயிகள் நில உடமைகளை பதிவு செய்து தனித்துவ அடையாள எண் வழங்குவதற்கான முகாம்கள் அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெற்று வருகின்றன. இப்பணியானது வேளாண்மைத் துறை, தோட்ட கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை துறை மற்றும் விதை சான்று துறை சார்ந்த அலுவலர் களால் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.



வரும் காலங்களில் விவசாய அடையாள எண் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பிரதம மந்திரி கௌரவ நிதி (பி எம் கிசான்) திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் வழங்கப்படும் ரூபாய் 6000 உதவி தொகை பெற இயலும்.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மானியங்கள்,மானிய விலையில் உரங்கள், விதைகள், பயிர் காப்பீடு, பேரிடர் நிவாரண நிதி போன்றவைகளில் விவசாயிகள் பயனடைய இந்த அடையாள எண் கட்டாயமாக்கப்படுகிறது.

புதுக்கோட்டை வட்டாரம் பெருங்கர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட வெள்ள வெட்டான்விடுதி கிராமத்தில் நடைபெற்ற விவசாயிகள் அடையாள எண் பதிவு முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் (விதை சான்றளிப்புதுறை) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது விவசாயிகளிடம் இதுவரை நில உடமைகளை பதிவு செய்யாத விவசாயிகள் தங்களது பகுதியில் நடைபெறும் முகாம்களிலோ அல்லது தங்களது வேளாண்மை விவரிவாக்க மையங்களிலோ அல்லது அருகாமையில் உள்ள பொது சேவை மையங்களில் நேரடியாக அணுகி தங்கள் பெயரில் உள்ள நில ஆவணங்கள் (பட்டா,சிட்டா), ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் போன்ற ஆவணங்களை கொண்டு விவசாயஅடையாள எண் பதிவு செய்து தொடர்ந்து வேளாண் திட்டங்களை பயன் பெறுமாறு கேட்டு கொண்டார்கள்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த சான்றிதழ் படிப்பின் சான்றிதழ் வழங்கும் மற்றும் துவக்கவிழா

கோயம்புத்தூர், மே 25

தமிழ்நாடு வேளாண்மை ப்பல்கலைக்கழகம், புதுமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வி முறைகளின் மூலம் தரமான கல்வியை வழங்குவதில் தொடர்ந்து தனது அர்ப்பணிப்பை நிலைநிறுத்தி வருகிறது. இந்நோக்கத்திற் கிணங்க, பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) திட்டங்களைச் செயல்படுத்தி, விரிவான கற்றலாளர்கள் சமூகத்திற்கு கல்வி வாய்ப்புகளை வழங்கி வருகிறது.




இத்திட்டங்களுள், பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த சான்றிதழ் படிப்பு திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோர் முன்னேற்றம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் முக்கியமான திட்டமாக உருவெடுத்துள்ளது.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த சான்றிதழ் படிப்பு முதன் முதலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கோயம்புத்தூர் வளாகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டது. அங்கு சுமார் பத்து தொகுப்புகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், மாணவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து சிறந்த வரவேற்பும் கிடைத்தது.

இத்திட்டத்திற்கான அதிகரித்து வரும் தேவையையும், விரிவாக்க நடவடிக்கைகளின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, பின்னர் இப்பயிற்சி வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம், பட்டுப்புழுவியல் துறைக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அங்கு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மேலும் ஐந்து தொகுப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன. இது, இத்திட்டத்தின் வளர்ந்து வரும் முக்கியத்து வத்தையும், கற்றலாளர்களிடையே பெற்றுள்ள வரவேற்பையும் வெளிப்படுத்துகிறது.

இதுவரை சுமார் 1,000 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். மாணவர்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பில் கோட்பாட்டு அறிவும், செய்முறை அனுபவமும் பெறும் வகையில் இப்பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், ஜூனியர் இன்ஸ்பெக்டர் ஆஃப் செரிகல்ச்சர் (Junior Inspector of Sericulture) போன்ற போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்கள் திறம்படத் தயாராகின்றனர். மேலும், பட்டுப்புழு வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை நிறுவி வெற்றிகரமாக நிர்வகிக்க தேவையான தொழில்நுட்ப அறிவும் மேலாண்மை திறன்களும் வழங்கப்பட்டு தொழில்முனைவோர் உருவாக்கத் திற்கும் இத்திட்டம் ஊக்கமளிக்கிறது.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த சான்றிதழ் படிப்பின் சான்றிதழ் வழங்கும் மற்றும் துவக்க விழா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் மற்றும் பட்டுப்பூச்சி வளர்ப்புத் துறை இணைந்து மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக நிர்வாகிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு, பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களின் சாதனைகளை கொண்டாடியதுடன், புதியமாணவர்களையும் வரவேற்றனர். நிகழ்ச்சி, வேளாண் துறையில் தொலைதூரக் கல்வி மற்றும் தொழில்முனைவோர் பயிற்சியின் மாற்றுத்திறனைக் குறிப்பிடும் நிறுவன உரைகளுடன் தொடங்கியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் சி.பாபு, தலைமை உரையாற்றி, நவீன கல்வியில் தொழில்முனைவுத் திறன் ஒருங்கிணைப்பின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், திறந்த

மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) திட்டங்களின் நெகிழ்வுத் தன்மையை கற்றலாளர்கள் தங்கள் தொழில் முன்னேற்றத் திற்காகப் பயன்படுத்த வேண்டும் என ஊக்கமளித்தார்.

திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி இயக்குநர் முனைவர் பி.பாலசுப்பிரமணியம், துவக்க உரையாற்றி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) வழங்கும் 44 தொலைதூரக் கல்வி படிப்புகளின் வெற்றிக் கதைகளை பகிர்ந்து, புதிய மாணவர்கள் கிராமப்புற மற்றும் வேளாண் துறைகளில் புதுமைகளை உருவாக்க வேண்டும் என ஊக்குவித்தார்.

வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் அ.பாலசுப்பிரமணியன், வாழ்த்துரை வழங்கி, பட்டுப்புழு வளர்ப்பின் வணிக வாய்ப்புகள் மற்றும் மாணவர்கள் வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறுவதற்கு நிறுவன இன்கியுபேன் மையங்கள் (Incubation cetre) வழங்கும் தொழில் நுட்ப மற்றும் வழிகாட்டுதல் ஆதரவுகள் குறித்து விளக்க மளித்தார். பின்னர், மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பட்டுப்புழுவியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் கே.ஏ.முருகேஷ் வரவேற்புரை வழங்கி, அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சிக்கு உற்சாகமான தொடக்கத்தை அமைத்தார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, 2025 ஆம் ஆண்டுத் தொகுப்பில் பயின்று சான்றிதழ் படிப்பை வெற்றிகரமாக முடித்த 29 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவர் களில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற மூன்று மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டன. இது எதிர்கால மாணவர்களுக்கு சிறந்த முன் மாதிரியாக அமைந்தது.

மேலும், 2026 ஆம் ஆண்டுத் தொகுப்பில் இணைந்துள்ள 60 ஆர்வமுள்ள புதிய மாணவர்களுக்கானஅறிமுக மற்றும் துவக்க நிகழ்வும் நடைபெற்றது. இதன் மூலம், பட்டுப்புழு வளர்ப்பு கல்விப் பயணத்தில் புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டது. இறுதியாக, திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி உதவி பேராசிரியர் முனைவர் எஸ்.சுசிகரன் நன்றியுரை வழங்கி, வேளாண் தொழில் முனைவுத் திறன் மற்றும் கல்வி மேம்பாட்டை வளர்க்கும் நிறுவனத்தின் பணிக்குத் துணைபுரிந்த அனைவரின் ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்.

# நவீன வேளாண்மையில் தென்னை குரும்பை உதிர்தல்

தென்னையில் குரும்பை உதிர்வது ஏன்? அதைக் கட்டுப்படுத்துவது எப்படி? இத்தகைய கேள்விகளுக்கு விடை காண தென்னை விவசாயிகள் விரும்புகின்றனர். குரும்பை உதிர்வது பின்வரும் காரணங்களில் ஏதாவது ஒன்று அல்லது பல காரணங்களால் ஏற்படலாம்.



1. தென்னையைப் பாதிக்கக்கூடிய மண் வகைகள், 2. போதிய வடிகால் வசதியின்மை, 3. கடுமையான வறட்சி, 4. மிகக் குறைந்த காய்ப்புத்திறன், 5. முக்கியமான சத்துக்குறைவு, 6. மகரந்தச் சேர்க்கைக் குறைவு, 7. புயிர் ஊக்கிக் குறைவு, 8. நோய்கள், 9. பூச்சிகள்.

## தென்னையைப் பாதிக்கக்கூடிய மண்வகைகள்

மண், பி.எச்.5.5 ( அமிலத்தன்மை) முதல் பி.எச்.8.0 வரை (காரத்தன்மை) உள்ள நிலங்களில் தென்னை நன்றாக வளரும். மண்ணில் பி.எச்.5.5 க்குக் குறைவாக இருந்தால் அமிலத் தன்மை அதிகம் என்றும் அறியலாம். அமிலத்தன்மை அதிகம் இருந்தால் சுண்ணாம்புச் சத்தும் சாம்பல்சத்தும் குறையும் மண்ணில் சுண்ணாம்பு இடுவதால் அமிலத்தன்மையைச் சரி செய்ய முடியும். அதிகக் காரத்தன்மையிருந்தால் பயிர் பாதிக்கப் பட்டு குரும்பபை மற்றும் இளந்தோய்காய்கள் உதிர்கின்றன. இயற்கை உரம் மற்றும் ஜிப்சம் இடுவதால் காரத்தன்மையை நிவர்த்திக்கலாம்.

## போதிய வடிகால் வசதியின்மை

வடிகால் வசதியின்மையால் தென்னையின் வேர்கள் காற்றோட்டம் கிடைக்காமல் பாதிக்கப்படுகின்றன. இத்தகையை மண்களில் சல்பைட் மற்றும் நீரில் கரையும் இரும்பு மற்றும் அலுமினியக் கூட்டுப்பொருள்களின் வேதியியல் மாற்றங்களை ஏற்படுத்தித் தாவர உணவு மரத்துக்குக் கிடைப்பது பாதிக்க படுவதால் இளங்காய்கள் உதிர்கின்றன. தகுந்த வடிகால் வசதி செய்வதால் மரத்தைப் பாதிக்கக்கூடிய வேதியியல் பொருட்கள் மண்ணிலிருந்து நீக்கப்படுகின்றன.

## கடுமையான வறட்சி

தென்னை பூக்கும் பருவத்தில் கடுமையான வறட்சி நிலவும் போது தென்னையின் மட்டைகள் தொங்குகின்றன. குரும்பை மற்றும் இளங்காய்கள் உதிர்கின்றன. கடுமையான வறட்சியைச் சாமளிக்க கோடையில் நல்ல நீர்ப்பாசனம் இயற்கை உரம் இடுதல் இடைவெளியில் சில காலம் பயிர் செய்யாமல் விடுதல் நிலத்தில் சரிவானப் பகுதிக்கு எதிராக வரப்புகள் கட்டி மழை நீரைத் தேக்குதல் அவசியம் தென்னை மரங்களைச் சுற்றி உரிமட்டை உடைந்த தென்னை மட்டை அல்லது தீவனப் புற்களின் தண்டு. பனை ஓலை நெல்பதர் தேங்காய் நார்க்கழிவு

போன்றவற்றில் ஏதாவது ஒன்றை மரத்தைச் சுற்றி 2 மீட்டர் ஆரமுள்ள வட்டத்தில் பரப்புவதால் மண்ணில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் இழக்கப்படுவதைக் தடுக்கலாம். இரண்டு தென்னை மரங்களின் வரிசகைக்கு இடையில் 1.5 மீட்டர் அகலம் 6 மீட்டர் நீளம் 45 செ.மீ ஆழம் உள்ள காண்வெட்டி உரிமட்டைகளைக் குழிவான பகுதிமேல் உள்ளவாறு இரண்டு வரிசைகளாக அடுக்கிப் பிறகு மண்ணால் நன்றாக மூடலாம். மழைக்காலத்தில் கிடைக்கும் மழைநீர் புதைக்கப்பட்ட உரி மட்டைகளால் உறிஞ்சப்பட்டு கோடை காலத்தில் மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது. ஒரு கிலோ உரி மட்டை 6 முதல் 8 கிலோ தண்ணீரை உறிஞ்சுவதால் இது. சிறந்த முறையாகும். துவிர நாளடைவில் உரிமட்டை மக்கி சாம்பல்சத்து கிடைக்கிறது.

**மிகக்குறைந்த காய்ப்புத்திறன்**

நல்ல பராமரிப்பில் உள்ள தோப்புகளில் கூட காய்ப்பு மிகக் குறைவாக உள்ளதைக் காணலாம். இம்மரங்களில் குரும்பை உதிர்கிறது. இதற்குக் காரணம் இதன் தாய்மரத்தின் பாரம்பரிய குணாதிசயங்கள் தாய்மரம் குறைந்த காய்ப்புத்திறன் உள்ளதாக இருந்தால் அதன் வழிவந்த மரங்களில் காய்ப்புக் குறைவதும் குரும்பை உதிர்வதும் உண்டு. எனவே தாய்மரங்களிலிருந்து விதை நெற்று எடுக்க தேர்ந்தெடுக்கும் போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். நல்ல காய்ப்புள்ள அதாவது ஆண் டொன்றுக்கு மரம் ஒன்றுக்கு 100 காய்களுக்குக் குறையாமல் உள்ள மரங்களி லிருந்து விதை நெற்று தேர்ந்தெடுக்க வேண்டும்.

**முக்கியமான சத்துக்குறைவு**

தென்னைக்குத் தேவையான முக்கியமான சத்துகள் தழைச் சத்து மணிச் சத்து சாம்பல் சத்து சுண்ணாம்பு சத்து மற்றும் கந்தகச் சத்துக்களாகும். ஒரு ஹெக்டேர் தென்னந்தோப்பில் காய்க்கும் பருவத்தில் உள்ள மரங்கள் 75 கிலோ தழைச்சத்து 300 கிலோ மணிச்சத்து 112 ½ கிலோ சாம்பல் சத்து 25 கிலோ சுண்ணாம்புசத்து மற்றும் 42½ கிலோ மக்னீசிய சத்துக்களை எடுத்துக்கொள்கின்றன என்ற விபரம் ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இவற்றில் தழைச் சத்து மணிச்சத்து அதிகளவில் எடுத்துக்கொள்ளப்படுவதால் பெரும் பான்மையான நிலங்களில் போதிய உரங்களுடன் மேற்கண்ட சத்துக்களை மரம் ஒன்றுக்கு ஓர் ஆண்டுக்கு முறையே 600 கிராம் 320 கிராம் 1200 கிராம் என்ற விகிதத்தில் அளித்து நீர்ப் பாசனம் செய்வதால் குரும்பை உதிர்வது குறைந்து உற்பத்தி பெருகும்.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.*

# நிரந்தர உற்பத்திக்கு விதைப்பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைப்பீர்!

வேளாண்மையின் உற்பத்திக்கு விதை அடிப்படையான இடுபொருளாகும். வேளாண்மையின் நிரந்தர உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கு விதை தான் அடிப்படை இடுபொருளாகும். உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்க செய்வதற்காக தமிழ்நாடு அரசு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் விதைப்பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகிறது.

விதையின் தரத்தை அறிய விதைப்பரிசோதனை செய்யப் படுகிறது. இப்பரிசோதனையில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

விழுப்புரம் விதைப்பரிசோதனை நிலையத்தில் உழவர் களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றது.

பணி விதையின் அளவு விவரம் நெல் பயிர் என்றால் 50 கிராம், மக்காசோளம், மணிலா – 500 கிராம், ராகி, கம்பு, தக்கை பூண்டு – 25 கிராம், உளுந்து, பச்சைப்பயிறு, சோளம் ஆகிய வற்றிக்கு – 100 கிராம் விதைகளும் பணி விதை மாதிரி அளவாகும்.

எனவே விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/– கட்டணம் செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளம் விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் – இ-நாம் செயல்பாடுகள் பற்றிய பயிற்சி



ஈரோடு, மே 25

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் – இ-நாம் செயல்பாடுகள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா, அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் எலவமலை வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் – இ-நாம் செயல்பாடுகள் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இந்த பயிற்சியினை வேளாண்மை துணை இயக்குநர் செ.ஜெய மணி, தலைமை ஏற்று துவக்கி வைத்தார். மேலும் மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில் சமச்சீர் முறையில் உர மேலாண்மை மேற்கொள்ள வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் 48 மண் மாதிரிகள், 12 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் பரி சோதனை செயல்விளக்கமாக செய்து காட்டப்பட்டது. குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் டாக்டர் முனைவர் ரா.சுரேஷ் (பொருளியில் துறை) வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் – இ-நாம் செயல்பாடுகள், வழிமுறைகள் போன்ற வற்றை விளக்கமாக கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பாக அபிநயா, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மையம் செயல்படும் முறைகளை விளக்கமாக கூறினார். வேளாண்மை அலுவலர் ந.நிவேதா, வேளாண்மை துறையின் மூலம் செயல் படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத் தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளி வாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் தி.கார்த்திகேயன், நடமாடும் மண் பரிசோதனை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் அதிக விளைச்சல் பெற சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவீர்!

விவசாயிகள் அதிக விளைச்சல் பெற சான்று பெற்ற விதைகளை உபயோகபடுத்த வேண்டும் என்று நாமக்கல் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் இரா.கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

நல்ல லாபகரமான வேளாண்மைக்கு நல்ல விதை, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு இன்றியமையாததாகும். இதில் முக்கியமானது மற்றும் ஆதாரம் நல்ல விதையாகும். நல்ல விதை அல்லது தரமான விதை என்னவென்றால் பாரம்பரிய குணங்களை கொண்டிருத்தல், அதிகபட்ச முளைப்புத்திறனை கொண்டிருத்தல் பிற ரகங்கள் மற்றும் களைச் செடிகளின் விதைகள் இல்லாது இருத்தல், பூச்சி நோய்தாக்கம் இல்லாமல் இருத்தல், மண் மற்றும் செடிகளின் பாகங்கள் இல்லாமல் இருத்தல் ஆகும்.

விதைச்சான்றளிப்பு துறையால் சான்று செய்யப்படும் விதைகள் மேற்கூறிய அனைத்து குணங்களையும் கொண்டிருக்கும், சான்று விதை என்பது ஆதாரவிதை (வெள்ளை அட்டை பொருத்தப்பட்டது) உபயோகித்து விவசாயியின் வயலில் உற்பத்தியாளரால் சாகுபடி செய்யப்படுகிறது. பயிர் பூக்கும் தருணத்திற்கு 15 நாட்கள் முன்னதாக விதைச்சான்றளிப்பு துறையில் விதை பண்ணையாக பதிவு செய்யப்படுகிறது. விதைப்பண்ணை பூக்கும் தருணத்திலும், முதிர்ச்சி பருவத்திலும் விதைச்சான்று அலுவலரால் வயலில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வின் போது வயல் தரம் மற்றும் விதைத்தரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட தரம் இருந்தால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கு சான்றளிக்கப்பட்டு அவை விற்பனைக்கு தயாராகின்றன. விதைப்பண்ணையில் இருந்து விதை கொள்முதல் செய்யப்பட்டு அரசால் அங்கீகாரம் செய்யப் பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

அங்கு சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு, கழிவுகள் நீக்கப் பட்டு, சுத்தமான ஒரே மாதிரியான விதைகள் பிரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட விதை குவியலில் விதை மாதிரி எடுக்கப்பட்டு விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. பகுப்பாய்வில் தேறிய விதை குவியலுக்கு சான்றட்டைப் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

எனவே, விவசாயிகள் இது போன்ற சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# பயிர்களில் சத்து குறைபாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள்



பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு 17 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் தேவைப்படுகின்றன. இந்த ஊட்டச்சத்துக்கள் மண்ணில் போதிய அளவு இல்லாத போது பயிர்களில் சத்து குறைபாடு ஏற்படும். இவற்றில் ஏதேனும் ஒன்றின் அளவு குறைந்தாலும், பயிர்கள் சில குறிப்பிட்ட ஊட்டச்சத்து பற்றாக்குறை அறிகுறிகளை வெளிப்படுத்தும்.

## பயிர்களில் சத்து குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

- ஒரே நிலத்தில் மாற்றி மாற்றிப் பயிர் செய்யாமல் ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதால் குறிப்பிட்ட சத்துக்கள் தீர்ந்து விடுவது.
- மண் அதிக அமிலமாகவோ (Acidic) அல்லது காரமாகவோ (Alkaline) இருந்தால், மண்ணில் சத்துக்கள் இருந்தாலும் வேர்களால் அவற்றை உறிஞ்ச முடியாது.
- அதிக தண்ணீர் தேங்கினாலும் அல்லது வறட்சி ஏற்பட்டாலும் வேர்களின் சத்து உறிஞ்சும் திறன் பாதிக்கப்படும்.



● மண்ணில் மட்கிய தொழுஉரம் அல்லது பசுந்தாள் உரம் இடாததால் நுண்ணுயிரிகள் குறைந்து சத்துக்கள் பயிருக்குக் கிடைக்காமல் போவது.

**பயிர்களில் சத்து குறைபாடுகள் கண்டறியும் முறைகள்**

பயிரின் எந்தப் பகுதியில் அறிகுறி தோன்றுகிறது என்பதை வைத்தே என்ன குறைபாடு என்று எளிதாகக் கண்டறியலாம்.

**சத்துப் பற்றாக்குறையைக் கண்டறியும் எளிய வழிகள்**

| சத்துப்பற்றாக்குறை அறிகுறி | ஊட்டச்சத்து பற்றாக்குறை |
|---|---|
| அடி இலைகளில் பாதிப்பு தெரிந்தால் | நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K), மக்னீசியம் (Mg). |
| நுனி/இளம் இலைகளில் பாதிப்பு தெரிந்தால் | சல்பர் (S), இரும்பு (Fe), மாங்கனீசு (Mn). |
| வளர்ச்சி மொட்டுகளில் பாதிப்பு தெரிந்தால் | கால்சியம் (Ca), போரான் (B). |
| முதிர்ந்த இலைகள் முழு இலையும் மஞ்சள் ஆதல் | தழைச்சத்து (Nitrogen) குறைபாடு |
| இலைகள் ஊதா அல்லது அடர்சிவப்பு நிறமாதல் | மணிச்சத்து (Phosphorus) குறைபாடு |
| இலையின் ஓரங்கள் மட்டும் கருகிப்போதல் | சாம்பல் சத்து (Potassium) குறைபாடு |
| இலை நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதி மஞ்சள் ஆதல் | மக்னீசியம் (Magnesium) குறைபாடு |
| நுனி இலைகள், இளம் இலைகள் மட்டும் மஞ்சள் நிறமாதல் | கந்தகம் (Sulphur) குறைபாடு |
| இளம் இலைகள் வெளுத்து வெண்மையாக மாறுதல் | இரும்புச்சத்து (Iron) குறைபாடு |
| இலைகள் சிறுத்து, கணுக்கள் சுருங்கி செடி குட்டையாதல் | துத்தநாகம் (Zinc) குறைபாடு |
| மொட்டுகள் கருகி, இலை நுனிகள் சுருளுதல் | கால்சியம் (Calcium) குறைபாடு |
| பூக்கள் உதிர்தல், பிஞ்சுகள் வெடித்தல், மலட்டுத் தன்மை | போரான் (Boron) குறைபாடு |

**சத்துகுறை பாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள்**

● பயிர் செய்வதற்கு முன் மண்ணைப் பரிசோதித்து, எந்தச் சத்து குறைவாக உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ப உரமிட வேண்டும். மண்ணின் pH அளவு மாறும் போது பயிர்களால் சத்துக்களை உறிஞ்ச முடியாது.

● அமில மண்களுக்குச் சுண்ணாம்பு (Lime) இடவேண்டும். காரத் தன்மை மற்றும் உவர்மண்களுக்கு ஜிப்சம் (Gypsum) இட்டு மண்ணைச் சீரமைக்க வேண்டும்.

● ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் உரம் இடவேண்டும். பசுந்தாள் உரப்பயிர்களை (சணப்பை, தக்கைப் பூண்டு) மடக்கி உழுவது சத்து குறைபாட்டை நிரந்தரமாகத் தடுக்கும்.

● பயிர்கள் சத்துக்களை வேர்மூலம் உறிஞ்ச முடியாத இக் கட்டான சூழ்நிலைகளில், குறிப்பிட்ட ஊட்டச்சத்துக்களை நேரடியாக இலைகளில் தெளிப்பதன் மூலம் மிக விரைவாக குறைபாட்டைச் சரி செய்யலாம்.

● இலைகள் மஞ்சள் நிறமாக மாறினால், 0.5% முதல் 1% வரையிலான யூரியா கரைசலை இலைகளில் தெளிக்க வேண்டும்.

● நுண்ணூட்டச் சத்து குறைபாட்டிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறை தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பரிந்துரைக்கும் பயிர் சார்ந்த நுண்ணூட்டச் சத்துக் கலவைகளை பயிர் சாகுபடி செய்யும் போது அடியுரமாக மண்ணில் இடவேண்டும். நெல் நுண்ணூட்டக்கலவை, பருத்தி நுண்ணூட்டம், சிறுதானியங்கள் நுண்ணூட்டம், பயறு வகைகள் நுண்ணூட்டம், மக்காச்சோளம், எண்ணெய்வித்துநுண்ணூட்டம், கடலை நுண்ணூட்டம், கரும்பு, தென்னை நுண்ணூட்டக் கலவை என தனித்தனியாக கிடைக்கிறது. சத்து குறைபாடு தீவிரமாக இருக்கும் போது, உரங்களை நீரில் கரைத்து இலைகளின் மேல் தெளிப்பதன் மூலம் விரைவான தீர்வு காண முடியும்.

● இலைகளின் நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதி மஞ்சளானால், எப்சம் உப்பு கரைசலைத் தெளிக்கவேண்டும்.

● தொழுஉரம், மண்புழு உரம், காம்ப்போஸ்ட் அல்லது தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாள் உரங்களை 2 – 3 வருடங்களுக்கு ஒரு முறை மண்ணில் இடுவதன் மூலம் மண்ணின் வளம் நீடித்து, சத்துக் குறைபாடுகள் வராமல் தடுக்கலாம்.

● அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் ரைசோபியம் போன்ற திரவ உயிர் உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் காற்றில் உள்ளத தழைச்சத்தையும், மண்ணில் கரையாத நிலையில் உள்ள மணிச்சத்தையும் பயிர்கள் எளிதில் உறிஞ்சும் வடிவத்திற்கு மாற்றலாம்.

● பயிர்களை விதைப்பதற்கு முன்பே தகுந்த உயிர் உரங்கள் மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளைக் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஆரம்பக் கட்டத்திலேயே வேர் வளர்ச்சி தூண்டப்பட்டு, ஊட்டச்சத்து உறிஞ்சும் திறன் அதிகரிக்கும்.

● அதிகப்படியான தண்ணீர் தேங்குவதோ அல்லது வறட்சியோ சத்துக்களைப் பயிர்கள் எடுப்பதைத் தடுக்கும்.

எனவே, சொட்டு நீர் பாசனம் போன்ற நவீன முறைகள் மூலம் உரங்களை நீருடன் கலந்து அளிக்கும் 'பெர்டிகேன்' (Fertigation) முறையைப் பின்பற்றலாம்.

பயிர்களில் சத்துக் குறைபாடுகளைத் தவிர்க்க, இரசாயன உரங்களை மட்டும் நம்பியிருக்காமல் இயற்கை உரங்களுடன் இணைந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையை மேற்கொள்வதே மண்ணுக்கும் பயிருக்கும் ஆரோக்கியமானதாகும்.

தகவல் : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.***

